| Headline | Muhyiddin launches 100 million Tree-Planting Campaign | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 06 Jan 2021 | Color | Full Color |
| Section | News | Circulation | 65,000 |
| Page No | 12 | Readership | 415,000 |
| Language | Tamil | ArticleSize | 169 cm² |
| Journalist | NULL | AdValue | RM 983 |
| Frequency | Daily | PR Value | RM 2,950 |



# 100 மில்லியன் மரம் நடும் இயக்கம் பிரதமர் துவக்கி வைத்தார்

புத்ராஜெயா, ஜன.6-

நூறு மில்லியன் மரம் நடும் இயக்கத்தை நேற்று பிரதமர் டான்ஸ்ரீ மொகதீன் யாசின் துவக்கி வைத்தார்.

தமது அதிகாரப்பூர்வ இல்லமான ஸ்ரீ பெர்டானா தோட்டத்தில் மெர்பாவ் மரத்தை நட்டு இந்த இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

மலேசியாவை பசுமை பொங்கும் நாடாக மாற்றுவதில் மக்கள் வெற்றி பெற வேண்டும். இத்தகைய வெற்றியை உறுதிப்படுத்த மக்களின் பரவலான பங்கேற்பு அவசியம் என்று பிரதமர் அறைகூவல் விடுத்துள்ளார். 2025 ஆம் ஆண்டு வாக்கில் 100 மில்லியன் மரங்களை நட்டு மலேசியாவை பசுமை நிலமாக மாற்றுவதில் நாம் வெற்றி பெறுவோம்.

இந்த பிரச்சார இயக்கமானது சிறப்பான அகப்பக்கத்தை கொண்டுள்ளது.

www.100jutapokok.gov.my மரம் நடும் பிரச்சார இயக்க விழாவில் இயற்கை வள அமைச்சர் ஷம்சுல் அனுவார், துணையமைச்சர் அலி பிஜூ, அரசாங்க தலைமைச் செயலாளர் ஜுக்கி அலி ஆகியோர் பங்கேற்றனர்.

மரம் நடும் இயக்கம் மாநில அளவில் ஏக காலத்தில் துவக்கப்பட்டது.

மலேசியாவை பசுமையாக மாற்றுவோம். நம் மரங்கள் நமது வாழ்க்கை என்பதுடன் இந்த இயக்கத்தின் கருப்பொருள் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 100 மில்லியன் மரங்களை நடுவதுதான் நமது இலக்கு. வனவள இலாகா, மாநில வனவள இலாகா , வனவள ஆய்வுக்கழகம் மாநில அரசாங்கங்கள் ஆகியவற்றின் அணுக்கமான ஒத்துழைப்புடன் இந்த பிரச்சார இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்தும் உகந்த சுற்றுப்புற சூழலை இது உருவாக்கும் என்பது இந்த மரம் நடும் இயக்கத்தின் நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

Powered by: iSENTIA